Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Vol. 69 கர்த்தாவே, இரட்சியும்; நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவி கொடுப்பாராக. சங்.20:9 அக்டோபர் 2023 No.10

ஆவியானவரின் பிரசன்னத்திற்காகவும் வல்லமைக்காகவும் ஜெபம்

Prayer for the spirits presence and power

Rich Carmicheal

நம்மைச் சுற்றிலும் தீமையும், ஒழுங்கின்மையும், ஏமாற்றமும், பாவமும், ஆவிக்குரிய அந்தகாரமும் பெருகி வரும் இக்கட்டான காலத்தில் நாம் வாழ்வதைப் பார்க்கிறோம். இது ஆச்சரியப்படத்தக்கதல்ல, ஏனெனில் வேத புஸ்தகமும் இதை முன்னறிவிக்கிறது, அப்போஸ்தலனாகிய பவுலும் 'கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும்' என்று எச்சரிக்கிறார். *(2 தீமோ.3:1; மத்.24:7-13)* நமது எதிராளியான சாத்தான் தனது காலம் குறுகி விட்டது என்பதை அறிந்து ஒரு ஆவிக்குரிய போரை ஏற்படுத்துகிறான்.

இது கவலைக்கிடமாயிருப்பினும் '**பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்ளுவதில்லை**' என்பது *(மத்.16:18)* நமக்கு சந்தோஷத்தைத் தருகிறதல்லவா? தீங்கு நாளில் எதிர்த்து நிற்க, விசுவாசிகளாகிய நாம் கர்த்தரில் உறுதியாகவும் அவரது வல்லமையில் சத்துவமுடையவர்களாகவும் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்தவர்களாகவும் இருப்பது எவ்வளவு நல்லது! *(எபேசி.6:10-18)* நமது தேவன் சர்வ வல்லவர் என்றும் அவரது நோக்கங்கள் முற்றிலும் நிறைவேறுகின்றன என்றும் அறிவது எத்தனை நன்மையானது! நமது ஆண்டவராகிய இயேசு சீக்கிரமாக தமது முழு மகிமையோடும் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் வந்து நித்திய காலமாக தீமையை விரட்டியடிக்கப் போகிறார்.

எனவே நமது சூழ்நிலைகளால் நாம் துக்கித்தாலும், வரப்போகிற சகல மகிமையையும் நம் இருதயத்தில் கொண்டு முழு நம்பிக்கையுடனிருப்போம். இது பயத்தினால் ஒடுங்கிப் போகிற சமயமல்ல. நம்மைச் சுற்றிலுமுள்ள மக்களை தாக்கமடையச் செய்ய கொடுக்கப்பட்ட ஒரு வாய்ப்பு. "**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரியோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்**" *எபேசி.5:16.* நாம் உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவுமிருக்கிறோம். *(மத்.5:13-16)* ஜீவனுள்ள வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் மாசில்லாதவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருங்கள் *பிலி.2:14,15.*

நம்முடைய உறுதியான அழைப்பின் அழகிய விளக்கத்தைப் பாருங்கள்: "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுடையவர்களாகவும், நம்மை சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்" தீத்து 2:11-14. நாம் அவருடைய கிருபையால் இரட்சிக்கப்பட்டு விலையேறப் பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்ட அவருக்குச் சொந்தமான விசேஷித்த ஜனம். இந்த வேளை நமது வாழ்க்கைகள் நீதியாலும், நன்மையாலும், நற்கிரியைகளாலும் அவரது மகிமைக்காக நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆதாரங்கள்

கர்த்தருடைய மகிமைக்காக வாழவும், கனி கொடுக்கவும், பிற மக்களைக் கர்த்தரிடமாக இழுக்கத்தக்கதான ஏதோ ஒரு வித்தியாசத்தை அவர்கள் நம்மில் காண வேண்டும். நமது வாழ்வில் கர்த்தருடைய தொடுதலின்றி பிறருக்கு நாம் தாக்கமளிக்கும் நம்பிக்கையில்லை. உண்மையிலேயே அவராலேயன்றி நாம் ஒன்றும் செய்யக் கூடாது. *(யோவா.15:5)* நாம் நம்முடைய பெலன், திறமைகள், ஆதாரங்கள் போன்றவற்றின் மீது சார்ந்திருக்கக் கூடாது என்றும் அக்கினியும் பெலனும் நமக்கு வேண்டும். அதனை ஆண்டவர் மட்டுமே தர முடியும் என்று **ஜிம் சிம்பாலா** '**பரத்திலிருந்து வரும் ஏதோ**' என்ற கட்டுரையில் கூறுகிறார். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானம், வல்லமை, இரக்கம், தெய்வபயம் ஆகியவை நமக்கு வேண்டும். நம்மிலிருந்து ஜீவ தண்ணீர் ருள்ள நதிகள் புறப்பட வேண்டும். *(யோவா.7:38)* ஆவியின் கனிகளால் நிறைந்த வாழ்வு வாழ வேண்டும். *(கலா.5:22,23)*

நமது ஆண்டவர் நமது வாழ்வுகளில் நமது தேவைகளை நிரப்பக் கூடியவர். அவர் முடிவற்றவரும் அளவில்லா ஆதாரங்களையும் உடையவர். அளவில்லா வாழ்வு, அன்பு, இரக்கம் எல்லாவற்றையும் நம்முடன் பகிர்ந்து கொள்பவர். எபேசி.3:20-ன்படி "நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்ய வல்லமையுள்ளவர்." அவரைக் கிட்டிச் சேரும் போது அவர் நம்மண்டை கிட்டிச் சேருவார். *(யாக்.4:8)* அப்படியே நமது வாழ்வை அவரது வல்லமையாலும் அவரது ஜீவனாலும் அவரது அன்பினாலும் நிரப்புகிறார்.

தூய ஆவியானவரின் பணி

இவை எல்லாவற்றிற்கும் திறவுகோலாயிருப்பது தூய ஆவியானவரின் ஊழியமாகும். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" அப்.1:8. இது ஆதி சீஷர்களுக்கு இயேசு கூறியது. அவர்கள் உத்தமமாய் காத்திருந்து ஜெபித்தபடியால் பெந்தேகொஸ்தே நாளிலே அவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் பொழியப்பட்டார். தொடர்ந்து அவர்களை நிரப்பிக் கொண்டேயிருந்தார். அவருடைய பிரசன்னத்தாலும் வல்லமையாலும் அவர்கள் புறப்பட்டுப் போகவும், இவர்கள் உலகத்தைத் தலைகீழாக மாற்றுகிறார்கள் என குற்றஞ்சாட்டப்படக்கூடிய அளவுக்கு மக்களில் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். *(அப்.17:6)*

இன்று ஆவியானவருடைய பிரசன்னத்திற்காகவும் வல்லமைக்காகவும் காத்திருந்து ஜெபிக்கிறோமா? இயேசு சொன்னது போல பரிசுத்த ஆவியைத் தர பிதாவானவர் தாராளமுள்ள சிந்தையுடையவராயிருக்கிறார். லூக்.11:13-ல் இதைக் குறித்து "...பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்றார்". **இயேசுவின் வாக்குத்தத்தம், "...கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர் உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2023 அக்டோபர் மாத பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடு துதிக்கிறேன். அன்பு வாசகராகிய நீங்கள் ஆசிரியருக்காக ஜெபிக்கிறீர்கள் நன்றி. அவர்கள் காலையில் 12.00 முதல் 1.30 வரையும் மாலையில் 5.00 முதல் 6.30 வரையும் அலுவலகம் வர ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார். மேலும் பெலப்படுத்தும்படி தொடர்ந்து தினமும் ஜெபிக்கும்படி மிகவும் தாழ்மையாய் கேட்கிறேன்.

ஆவிக்குரிய பத்திரிகைகளுக்கு அரசாங்க சலுகைகள் ரத்து செய்யப்படுகிறது. கடந்த மாதம் நாகர்கோவிலில் வெளியிடப்படும் ஒரு பத்திரிகைக்கு சலுகை ரத்து செய்யப் பட்டு இரண்டு மடங்கு தபால் கட்டணம் வசூலிக்கப் பட்டது. எனவே நம்முடைய பத்திரிகைக்காக ஜெபியுங்கள். வெகு சிலர் மாத்திரமே சந்தா, காணிக்கைகள் அனுப்பு கிறீர்கள். தேவனுடைய பிள்ளைகள், **மாதந்தோறும் தாங்கும்படி** மிகவும் அன்பாய் கேட்கிறேன்.(வலது பக்கம் **அன்பான வாசகருக்கு . . . என்ற பகுதியை வாசிக்கவும்)**

இம்மாத வர்த்தமானம்

"..... தாழ்மைப்படுங்கள். . . அவர் உங்களை உயர்த்துவார்" யாக். 4:10

சவுலை கர்த்தர் இஸ்ரவேல் மேல் ராஜாவாக தெரிந்து கொள்ள அவனில் காணப்பட்ட 5 குணங்களை குறித்து சிந்திப்போம்.

1. கீழ்படிதலுள்ள சவுல்: (1 சாமு. 9:3-5)

சவுல் தன் தகப்பனுக்கு கீழ்படிகிறவனாய் இருந்தான். சவுலின் தகப்பனாகிய கீசுடைய கழுதைகள் காணாமற் போயிற்று; ஆகையால் கீஸ் தன் குமாரனாகிய சவுலை நோக்கி: நீ வேலைக்காரரில் ஒருவனைக் கூட்டிக் கொண்டு, கழுதைகளைத் தேட, புறப்பட்டுப் போ என்றான். அப்படியே அவன் எப்பிராயீம் மலைகளையும் சலீஷா நாட்டையும், சாலீம் நாட்டையும், பென்யமீன் நாட்டை யும், உருவக் கடந்தும் அவைகளைக் காணாமல் சூப் என்னும் நாட்டிற்கு வந்தான். இங்கே சவுலின் கீழ்ப்படிதல் எவ்வளவு அதிகமாய் இருக்கிறதென்று சிந்தித்துப் பாருங்கள். அருகிலுள்ள இடங்களுக்கு சென்று கழுதைகளை தேடி விட்டு காணவில்லை என்று கூறாமல் ஐந்து நாடுகளுக்கு தேடி செல்கிறான்.

நாம் நம் பரம தகப்பனுக்கு கீழ்படிந்து அவர் சித்தத்தை செய்கிறோமா? வேதம் வாசிக்கிறோம், ஜெபிக்கி றோம், ஆலயத்திற்கு போகிறோம், காணிக்கை கொடுக்கி றோம். இது கிறிஸ்தவனின் கடமை என்று செய்கிறோமா? அல்லது நம்முடைய பரம தகப்பனின் மேலுள்ள அன்பினால் செய்கிறோமா? கர்த்தர் பேதுருவை பார்த்து நீ என்னை நேசிக்கிறாயா? என்னை நேசித்தால் என் ஆடுகளை மேய்ப் பாயா என்று கூறுகிறார். (யோவா.21:15) கீழ்ப்படிந்தால் அன்பு கூறுவோம். அன்பு கூர்ந்தால் கீழ்ப்படிவோம். கர்த்தர் நம்மில் பூரண கீழ்படிதலை எதிர்பார்க்கிறார். **"....பலியை பார்க்கிலும் கீழ்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்."** (1 சாமு.15:22)

2. கரிசனையுள்ள சவுல்: (1 சாமு. 9:5)

சவுல் தன் தகப்பன் மேல் கரிசனையுள்ளவனாயிருந் தான். சவுல் தன்னோடிருந்த வேலைக்காரனை நோக்கி என் தகப்பன், கழுதைகளின் மேலுள்ள கவலையை விட்டு நமக்காகக் கவலைப்படாதபடிக்குத் திரும்பிப் போவோம் என்றான்.

அன்பான வாசகருக்கு . . . .

1. **மாதந்தோறும்** சில தேவ பிள்ளைகள் (வெகு சிலர் மட்டுமே) ரூபாய் 50,100,200,300,500 அதற்கும் அதிகமாக அனுப்பு கிறார்கள். நீங்களும் **மாதந்தோறும்** தாங்குங்கள்.
2. **மாதந்தோறும்** காகிதம், அச்சு கூலி, தபால் செலவுகள், வேலைக்கூலி, சம்பளம் கொடுக்கப்பட வேண்டியதால், எல்லா கிறிஸ்தவ ஊழியங்களையும் போல வருகையின் தூதன் ஊழியத்தையும் **மாதந்தோறும்** தாங்குங்கள்.
3. **மாதந்தோறும்** ரூபாய் 100 அனுப்பிக் கொண்டிருந்த ஒரு சகோதரி, வயதின் காரணமாக வருடத்திற்கு ஒரு முறை ரூபாய் 1200 அனுப்புகிறார்கள். மாதந்தோறும் தபாலில்/வங்கி வழியாக அனுப்ப இயலாத தேவ பிள்ளைகள் வருடத்திற்கு ஒரு முறையாவது குறைந்த பட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.

நம்முடைய பரம தகப்பன் நமக்காய் கவலைப் படுகிறவர். நம்மை தேடுகிறவர். என் மகனே, என் மகளே அதிகாலையில் என்னை தேட மாட்டாயா? என்று ஆவலோடு எதிர்பார்க்கிறார். பகலில் குளிர்ச்சியான வேளையில் தோட்டத்தில் உலாவுகிற தேவனுடைய சத்தத்தை கேட்கி றோமா? ஏதேன் தோட்டத்தில் தேவன் ஆதாமை தேடுகிறார். (ஆதி. 3:8,9) நாம் பரம தகப்பன் மேல் கரிசனையுள்ளவர் களாயிருந்தால் தேவன் நம்மை தேடுவார் என்ற எண்ணத் தோடு காலைதோறும் அவருடைய சமுகத்தில் காத்திருப் போம். **"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன். அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்."** (நீதி.8:17

3. செவிக்கொடுக்கும் சவுல்: (1 சாமு. 9:6)

நல்லாலோசனைகளுக்கு சவுல் செவி கொடுக்கிறவனா யிருந்தான். கழுதைகளை காணாமல் திரும்பி செல்ல எண்ணிய போது தன் வேலைக்காரன் சொல்லும் நல்லா லோசனைக்கு செவி கொடுக்கிறான். **"...இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார். அவர் பெரியவர், அவர் சொல்லுகிற தெல்லாம் தப்பாமல் நடக்கும். அங்கே போவோம். ஒரு வேளை அவர் நாம் போக வேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார் என்றான்"**. நாம் தேவனுடைய ஆலோசனைகளுக்கு செவி கொடுக்கிறோமா? **"உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி. அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்."** (நீதி.16:3)

4. கொடுக்கிற சவுல்: (1 சாமு. 9:7,8)

சவுல் கர்த்தருக்கு கொடுக்கிறவனாயிருந்தான். தேவனுடைய மனுஷனிடத்தில் கழுதைகளைக் குறித்து விசாரிக்க செல்லும் போது அவருக்கு கொண்டு போகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே என்று கவலைப்படுகிறான். நாம் ஆண்டவருக்கு கொடுப்பதைப் பற்றி கவலைப்படுகிறோமா? கர்த்தருக்கு கொடுத்தவர்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" லூக்.11:9,10. வழிந்தோடும் அளவில் தூய ஆவியான வரைப் பெற்றுக் கொள்ள நாம் கேட்கவும், தேடவும், தட்டவும் காலம் வர வில்லையா? அவர் தமது வல்லமை யாலும், கனியாலும், ஈவுகளாலும் நிரப்ப வேண்டாமா? தேவ வசனத்தைப் போதிக்க தைரியமடைய நாம் நிரப்பப் பட வேண்டாமா? அப்.4:31 எல்லா சத்தியத்திற்குள்ளாக நம்மை நடத்த அந்த ஆவியானவர் நம்மை நிரப்ப வேண்டுமே. (யோவா.16:13) நம்மை சுத்திகரிக்கவும் தூய்மையாக்கவும் ஆவி யானவர் தேவையல்லவா? ரோம.15:16, 1 கொரி.6:11.

தேவ வசனத்தாலும் ஜெபத்தாலும் சுத்திகரிக்கப்படுதல்

Sanctified by the word and prayer

Kim Butts

"பரிசுத்த தேவனைப் பற்றி அறியும் அறிவு நம்மை பரிசுத்தமாக்கும். தேவனைப் பற்றிய அறிவைப் பெறுவது நமது தனி ஜெப அறையில் தான். நாம் சமயமெடுத்து தேவனது பரிசுத்தம் நம்மேல் பிரகாசிக்க அனுமதிக்காவிட்டால் பரிசுத்தத்தைப் பெறுவது கூடாத காரியம்". - Andrew Murray

மோசே தேவ சமுகத்தில் பிர வேசித்த போதெல்லாம் அவனுடைய முகம் பிரகாசித்தது. "மோசே சாட்சிப் பலகைகள் இரண்டையும் கையில் எடுத்துக் கொண்டு சீனாய் மலையி லிருந்து இறங்குகிற போது, தன்னோடே அவர் பேசினதினாலே தன் முகம் பிரகாசித்திருப்பதை அவன் அறியாதிருந் தான்" யாத்.34:29 தூய தேவனோடிருந்த அவன் மறுரூபமடைந்திருந்தான்.

இதே விதமாக தனி ஜெப அறையில் நாம் தேவனை சந்திக்கும் போது அவர் முகப்பார்வை நம்மில் பிரகாசிக்கிறது. நாம் அவரது பரிசுத்த சீடர்களாக மறுரூபமாக்கப்படுகிறோம். எவ்வளவு அதிகமாக அவரோடு சமயம் செலவு பண்ணிகிறோமோ அவர் நம்மைப் புதுப்பித்து நமது வாழ்வு நம்மை சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு இயேசுவைப் பிரதிபலிக்கச் செய்கிறது. இத்தகைய உள்ளான வாழ்வுதான் சுத்தி கரிக்கப்படுதலாகும். இதனை தூய ஆவி யானவரின் உதவியுடனும் வழி நடத்து தலுடனும் மட்டுமே பெற முடியும்.

"தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக் கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல; அது தேவ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்" 1 தீமோ.4:4,5.

ஆதியாகமம் முதலாம் அதிகாரத் தில் மனுஷனும் மனுஷியும் உண்டாக் கப்பட்டதையும் அது நல்லது என்று தேவன் கண்டார் என்றும் பார்க்கிறோம். இப்போது நாம் பாவிகளாகவும் தவறு இழைக்கிறவர்களாகவும் காணப்படுகி றோம். எனவே தேவன் பரிசுத்தரா யிருப்பது போல நாமும் பரிசுத்தராகும் படி தூய ஆவியானவரின் உதவியுடன் சுத்திகரிக்கப்பட அழைக்கப்படுகிறோம்.

ஜெபம் என்பது பரிசுத்தரோடுள்ள உறவு. இதனை உதாசீனம் செய்தால் பரிசுத்தரின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தமாய் வாழ முடியாது.

சிருஷ்டிகள் யாவும் தேவ வசனத் தாலும் ஜெபத்தாலும் சுத்திகரிக்கப்படுவ தால் நாமும் சுத்திகரிப்படைய தேவ வசனங்களை சொல்லி ஜெபிக்க ஆரம்பிக்க வேண்டும்.

பிதாவின் பரிசுத்தம் நம்மில் வெளிப்பட உதவி செய்யும் சில வேத பகுதிகளை சிந்திப்போம்.

நாம் பரிசுத்தத்திற்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

"தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியால்...." (எபேசி.1:4) இந்த உலகம் தோன்று வதற்கு முன்னே நாம் பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்டவர்கள். தேவனுடைய உட்பார்வை எத்தனை ஆச்சரியமானது! நமக்குள் ஜீவ சுவாசத்தை அளிக்கு முன்னதாகவே நம்மை பரிசுத்த ஜனமாக அவர் கண்டார்.

ஜெபம்: பிதாவே உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே உமது பார்வையில் எங்களை பரிசுத்தமும் மாசற்றவர் களுமாகத் தெரிந்து கொண்டது ஆச்சரிய மான சத்தியம். நாங்கள் இந்த ஈவைக் குறித்து கவலையீனமாயிருப்பது உமது இருதயத்தை எவ்வளவு துக்கப்படுத்தும்! உமது ராஜ்யத்தின் திட்டத்திற்காக எங்களைப் பிரித்துக் கொள்வது எப்படி என்று நாங்கள் புரிந்து கொள்ளச் செய்யும். பரிசுத்தரான தேவனே, என் மேல் பிரகாசித்து என்னை சுத்திகரியும்.

"தேவன் நம்மை அசுத்தத்திற் கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக் கிறார்" 1 தெச.4:7. பரிசுத்தத்திற்கு நம்மை தெரிந்து கொண்ட தேவன் பரிசுத்தத்தை நாடும்படி நம்மை அழைக்கிறார். அவர் பரிசுத்தத்திற்கான பாதையைத் தெரிந்து கொள்ளும்படி அழைக்கிறார். எப்படி நாம் பதிலளிக்கிறோம்?

ஜெபம்: நீதியுள்ள தேவனே, எனது பாவ வழிகளுக்காகவும், லௌகீக தெரிந்து கொள்ளுதல்களுக்காகவும் இருதய துக்கத்தோடு பணிகிறேன். நீர் என்னை பரிசுத்தத்திற்கு அழைத்தும், உமது நோக் கத்துக்காக என்னை தயார் படுத்தவில்லை. உமது அழைப்புக்குக் கீழ்படிய கற்றுத் தாரும். பரிசுத்த தேவனே, என் மேல் பிரகாசித்து என்னைச் சுத்திகரிப்பீராக.

தேவன் பரிசுத்தராயிருப்பதால் தேவனை ஆராதியுங்கள்:

"கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுது கொள்ளுங்கள்" சங்.29:2. தேவன் நம்மை மறுரூபப்படுத்துவதற் காக பிதாவின் மகிமையைப் பார்த்து அவரது பரிசுத்தத்தில் அவரை ஆராதிக்க வேண்டும். அவரது தூய பிரசன்னத்தில் சமயம் செலவிடாமல் இந்த அனுப வத்தைப் பெறவே முடியாது.

ஜெபம்: உமது பரிசுத்தத்தின் மாட்சிமை யால் நான் பிரமிப்படைகிறேன். பிதாவே! நீர் ஒருவரே ஆராதனைக்கும் கனத்திற்கும் பாத்திரர். என்னை உமது சமுகத்தில் அழைத்து உமது பரிசுத்தத் தால் மறுரூபப்படுத்த என்னை அர்ப் பணிக்க விரும்புகிறீர். உமது குமார னாகிய இயேசுவின் சாயலில் பரிசுத்த மாய் மாறவும் அதனால் நான் அவரது தன்மையின் உயிருள்ள பிரதிபலிப் பாகவும் மாறட்டும். பரிசுத்த தேவனே என்மேல் பிரகாசித்து என்னை சுத்தி கரியும்.

அவர் பரிசுத்தராயிருப்பதால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்

"உங்களை அழைத்தவர் பரிசுத் தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்த ராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே". (1 பேது.1:15,16)

பரிசுத்தம் என்பது வேத வாக்கி யங்களின்படி ஒரு கட்டளை. இதற்கு கீழ்ப்படிய ஜெபம் என்பது கடமையாக அல்ல வாஞ்சையாயிருக்க வேண்டும். ஜெபம் என்பது பரிசுத்தரோடுள்ள உறவு. இதனை உதாசீனம் செய்தால் பரிசுத்தரின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தமாய் வாழ முடியாது.

ஜெபம்: இஸ்ரவேலின் பரிசுத்தரே, நான் உம்மால் முற்றிலும் அறியப்பட்டி ருப்பது போல உம்மை நானும் அறிந்து கொள்ளும் ஆழமான வாஞ்சையைத் தாரும். என் ஜெபக்குறைவை மன்னியும். உமது முகத்தைத் தேடாமல் எனது முயற்சியால் பரிசுத்தமாக முடியும் என்ற எண்ணத்தை என்னை விட்டகற்றும். நீர் பரிசுத்தராயிருப்பது போல நானும் இருப்பது எப்படி என்று காண்பித்துத் தாரும். என்மேல் பிரகாசித்து என்னை சுத்திகரிப்பீராக.

அவருடைய பரிசுத்தத்தை பகிர்ந்து கொள்ளுதல்

"அவர்கள் தங்களுக்கு நல மென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சித்தார்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர் களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக் கிறார். எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" எபி.12:10,11. நம்மில் அனேகர் துன்பங்களையும் பாடுகளையும் தவிர்க்க விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மை சுத்திகரிக்க இவைகளை பயன்படுத்துகிறார். நாம் சுத்திகரிக்கப்படாவிட்டால் பரிசுத்த வாழ்வுக்குள் பிரவேசிக்க முடியாது. பாடுகள் பரிசுத்தத்துக்கு பயிற்சிக் களமாயிருப்பதால் அவற்றை நாம் வரவேற்க வேண்டும். சகரி.13:9-ல் "அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப் பண்ணி, வெள்ளியை உருக்குகிறது போல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறது போல அவர்களைப் புடமிடுவேன்; அவர்கள் என் நாமத்தை தொழுது கொள்வார்கள்; நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்; இது என் ஜனமென்று நான் சொல்லுவேன்; கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள்" என்று கூறுகிறது. அக்கினி ஊடாக நாம் கடந்து செல்லாவிட்டால் அவரைப் போல பரிசுத்தராயிருக்க முடியாது.

ஜெபம்: பிதாவே உண்மையாகக் கூறினால் நான் சிட்சையினை விரும்புகிறதில்லை. ஒரு போதும் பாடுகளை நான் தெரிந்து கொள்வதில்லை. ஆனால் பாடுகளுக்கு நான் பங்காளியாயிராவிட்டால் நான் வளர்ச்சியற்ற பிரயோஜனமற்ற விசுவாசியாயிருந்து விட்டு வளர்ந்து வரும் பரிசுத்தமாக்கப்பட்ட இயேசுவின் பின்னடியாராய் இருக்க முடியாது. உமது அன்பின் சிட்சையை சகிக்கும் பெலனையும், எனது பாடுகளின் நடுவில் நீர் இருக்கிறீர் என்ற விசுவாசத்தையும், சுத்திகரிக்கும் அக்கினி, அதன் வேலையைச் செய்யும் போது அடங்கியிருக்கும் ஆவியையும் தந்து என்னை பரிசுத்தப்படுத்தும். என்மேல் பிரகாசித்து என்னைப் பரிசுத்தப்படுத்தும் தூய தேவனே.

நீதி பரிசுத்தத்திற்கு வழி நடத்தும்

"பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள்... அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்துக்கும் அடிமைகளாக ஒப்புக் கொடுத்தது போல இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுங்கள்" ரோம.6:18,19. நாம் இயற்கையாகவே பெலவீனர். நம்மைச் சுற்றிலுமுள்ள அசுத்தமான தொடர்புகள் அவற்றின் தேவ பயமற்ற கலாச்சாரம் ஆகியவற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இயேசு நம்மை பாவத்திலும் மரணத்திலுமிருந்து விடுவித்துள்ளார். ஆனாலும் நாம் நம்மை இருளுக்குள்ளே வைத்துக் கொள்கிறோம். கேடு செய்யாதது போல தோற்ற மளிக்கும் கவனச் சிதறல்களுக்கு இட மளிக்கிறோம். ஜெபத்தின் மூலமாகவே நீதியோடுள்ள தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டு முழுமையாக்கப்படுகிறது.

ஜெபம்: ஆண்டவராகிய இயேசுவே, உம்மாலே தான் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டேன். உமது நீதி எனக்குச் சொந்தமாயிற்று பரிசுத்தத்தைத் தெரிந்து கொண்டு உலக சோதனைகளை மேற் கொள்ள பெலன் தாரும். உமது ராஜ்யம் கட்டப்படுவதில் தீயவன் தலையிடும் போது எனக்கு எச்சரிப்பு தாரும். பரிசுத்த தேவனே என் மேல் பிரகாசித்து என்னை பரிசுத்தப்படுத்தும்.

தேவ பயத்தினால் பரிபூரண பரிசுத்தம்

"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால் பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" 2 கொரி.7:1

நாம் பரிசுத்தமாயிருக்க விரும்புவதை எது தடுக்கிறது என்பதை நாம் அறிவோம். நமக்குள் இருளை மறைத்து வைத்திருக்கும் போது இருதய நேர்மையுடன் வாழ முடியாது.

ஜெபம்: பரிசுத்த தேவனே, எனது சரீரத்தையும் ஆவியையும் அசுத்தப்படுத்துவதை எப்படி சுத்தப்படுத்துவது என்று எனக்குக் காண்பியும். என் இருதயத்தைக் காவல் பண்ணி, உமது பரிசுத்தத்தின் அழகை மட்டும் நான் பார்க்கும்படி செய்யும். எனது சொந்த எண்ணங்கள், செயல்கள் இவற்றின் கொடிய தன்மையிலிருந்து விலகிச் செல்ல பெலன் தருவதால் நான் உம்மைப் போல் காணப்படட்டும். அதிக பூரணமான பரிசுத்தத்திற்கு நேராக நான் நடக்க வழிகாட்டும். என் மீது பிரகாசித்து என்னை சுத்திகரியும் என் பரிசுத்த தேவனே.

A.W. Tozer என்பவர் இதைச் சுருக்கமாக இப்படி கூறுகிறார் "**பரிசுத்தம் வேத வாக்கியங்களின்படி நம்மிலுள்ள அறிவை அடிப்படையாகக் கொண்டதல்ல. அது உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மில் வாசம் செய்து, நம்மை அவரைப் போல மாற்றுருவாக்கம் செய்வதை அடிப்படையாகக் கொண்டது**".

தேவன் நமது வாழ்வை தாக்க மடையச் செய்ய நாம் அவரது பிரசன்னத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் நம்மை மாற்றுருவாக்கம் செய்வார். தேவனுடைய பரிசுத்தம் நம்மிலும் நம்மூலமாகவும் வெளிப்பட்டு நமது முகங்கள் கிறிஸ்துவின் மகிமையால் பிரகாசிக்கும். அவரது ராஜ்ய மேன்மைக்காக நாம் ஒவ்வொருவரும் சுத்திகரிப் படைவோமாக.

எப்போதுமே ஆவியின் நிறைவைத் தொடர்ந்தே கனிதரும் வாழ்வு ஏற்படுகிறது

Fruitfulness always follows fullness

Fred D. Jarvis

வேத அடிப்படையிலான கிறிஸ்தவம் வலுவும் ஜீவனுமாகும். ஆதிக் கிறிஸ்தவர்களிடம் சக்தியும் அதோடு உண்மையான விசுவாசமுமிருந்தது. அவர்கள் வெற்றியுடன் வாழ்வதன் இரகசியத்தை அறிந்திருந்தனர். அவர்களுக்கு இயேசு தான் ஆண்டவர். இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவம் தான் மீட்பின் மகா மகிமையான வடிவாய் அமைந்திருந்தது. அவர்தான் அவர்களுக்கு எல்லாமானவர். அவர்களது முக்கிய நோக்கம் "அவரே எல்லாவற்றிற்கும் முதல்வர்" கொலோ.1:18.

இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவமும் ஆவியின் நிறைவும் வெற்றியுள்ள விசுவாசத்தின் இரு அடிப்படை காரணிகளாயிருந்தன. அவர்கள் பரத்திலும் பூலோகத்திலுமுள்ள எல்லா அதிகாரங்களையுமுடைய இரட்சகரை ஆராதித்தனர்.

பரத்திலிருந்து இறங்கி வந்த வல்லமையால் ஆதித்திருச்சபை ஊழியம் செய்தது. அவர்கள் உலகத்தைத் தலை கீழாக மாற்றினர். அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம் வல்லமையின் காட்சிகளின் தொகுப்பு. அன்று அறியப்பட்ட உலகத்திற்கு பெந்தேகோஸ்தின் வல்லமை ஒரு பலத்த ஆசீர்வாதத்தின் அலையாயிருந்தது.

இயேசு, "...ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார். (யோவா.7:37,38) அவர்கள் ஒரு தெய்வீக ஆசீர்வாதத்தின் ஓட்டத்தை அனுபவித்தனர். அது ஒழுகிக் கொண்டே இருந்தது. அது கட்டி நிற்கும் ஒரு நீரோடையல்ல, ஒரு தனி நதியுமல்ல, அது ஜீவ தண்ணீருள்ள நதிகள்.

அவர்கள் தங்கள் பெலவீனத்திற்கு அழுத்தம் கொடாமல், அவருடைய பெலத்திலும் தங்கள் அர்ப்பணத்திற்கு முக்கியத்துவம் கொடாமல் அவரது பொழிவையும் முக்கியப்படுத்தினார்கள். தூய ஆவியானவர் இறங்கியதும் சீஷர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். சபை பிறந்தது, வல்லமையைப் பற்றிய இயேசுவின் வாக்குத்தத்தம் பெந்தே கொஸ்தே நாளில் நிறைவேறியது. ஒரே நாளில் இந்த சீடர்கள் ஆவிக்குரிய வல்லமையை உருவாக்குகிறவர்களாக மாற்றப்பட்டனர்.

இன்று தூய ஆவியானவரின் வல்லமை பெரும்பாலான சபைகளில் காணப்படவில்லை. ஆனால் நமது முக்கிய தேவை இன்று தூய ஆவியானவர்தான்.

நாம் இயற்கைக்கு மேலாக வாழ்வதைவிட மேலோட்டமான வாழ்வை வாழ்ந்து பழகி விட்டோம். இரு உலகிலுமுள்ள மிக நன்மையானவைகளை அனுபவிக்க முயற்சிக்கிறோம். உலகத்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தையும் சபையையும் பிரிக்கும் கோடு அழிக்கப்பட்டு விட்டது. பரிசுத்தவான்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குப் பதிலாக சபைகளின் எண்ணிக்கையை பெருக்கி விட்டோம்.

சபையின் சன்மார்க்க நிலை தாழ்ந்து விட்டது. பேர்க் கிறிஸ்தவர்கள் பெருகி, மறுபடி பிறவாத உலகினரின் பாவங்களும் நடத்தைகளும் புத்தியீனமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆனால் சபைகளோ தங்கள் எண்ணிக்கையில் பெருமை பாராட்டிக் கொண்டு தங்கள் வல்லமையில் தாழ்ந்து காணப்படுகிறார்கள்.

ஆதித்திருச்சபை சிலுவையிலறையப்பட்ட இயேசுவை மட்டும் அறிய தீர்மானித்திருந்தது. கிறிஸ்துவை அறியாதவர்களுக்குக் கிறிஸ்துவை பிரசங்கிப்பதே அவர்கள் நோக்கம். வருமானம், பாதுகாவல், சமூக அந்தஸ்து இவற்றைக் குறித்து அக்கரைப்படாமல், இருதய பூர்வமாக தேவ சித்தத்தை நிறைவேற்றினார்கள்.

அவர்கள் கட்டிடங்கள், பணம் இவற்றைக் குறித்து எண்ணாமல் தூய ஆவியினால் சாட்சி பகருவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். மாம்சத்தில் முயற்சி பண்ணி பெரிய கட்டிடங்களைக் கட்டவில்லை. ஆனால் மக்கள் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளும் படி தூண்டினர்.

வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிக்க ஆண்டவர் நம்மை ஆவியால் நிரப்பவில்லை. நம்மை அவருக்காகப் பணி செய்யவே தமது ஆவியால் நிரப்பினார். நாம் நிரப்பப்படும் போது கனி கொடுப்போம். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் சாட்சிகளாயிருப்பீர்கள்" அப்.1:8.

ஆவியானவர் பொழிந்தருளப் படும் போது ஆத்தும ஆதாயமும் சுவிசேஷ பணியும் தவிர்க்கப்பட முடியாதவை. நாம் முதலாவது நமது பார்வையை நம்மை விட்டு தூரப்படுத்த வேண்டும். இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும். பின்பு அழிந்து கொண்டிருக்கும் உலகைப் பார்க்க வேண்டும்.

அருளிச் செய்தார். "இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும்படி..." பிலி.2:10. பலிபீடத்தின் மேல் வைக்கப்பட்ட ஈசாக்குதான் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தாயிருந்தான். அந்த மோரியா மலை மேல் தான் தேவனுடைய மகிமையான ஆலயமும் கட்டப்பட்டது. ஈசாக்கு பலிபீடத்தின் மேல் வைக்கப்பட்டது போல நாம் முழுவதும் தேவனுக்கு சொந்தமாகும் போது ஜீவனுள்ள ஆலயத்திற்கு ஆழமான அஸ்திபாரமிட்டு நித்தியமான சுவர்களைக் கட்டுவார். அவரே மேன்மையும் நித்தியமுமான மகிமையுமானவர்.

ஒரு நாள் இரவில் நான் தனிமையிலும், துக்கத்திலும், தவறு நிறைந்தவனாகவும், எதிலும் பரிபூரணம் அற்றவனாகவும் இருந்த போது என் இருதயத்தை முற்றிலும் அர்ப்பணம் செய்தேன். விடியுமுன் எனக்கு மரணம் ஏற்பட எண்ணினேன். ஆயினும் அர்ப்பணத்தோடு நான் சொன்னேன்.

இயேசுவே, எனது சிலுவையை எடுத்தேன்
எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்செல்ல
அனாதை, ஒதுக்கப்பட்ட, கைவிடப்பட்ட எனக்கு
இன்று முதல் எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமே

- Henry F. Lyre

எனது இருதயம் சந்தோஷத்தால் நிறைந்தது. அடுத்த கர்த்தருடைய நாள் காலையில் இந்த வரிகளை முழு இருதயத்தோடும் பாடினேன். தேவன் அவர் வாசம் பண்ணும் மகிமையான ஆலயமாக மாற்ற விரும்பினார். என்னை முழுமையாக மாற்ற பயன்பட்டது அந்த இரவு தான். நான் என்னை அர்ப்பணமுள்ள, சிலுவையிலறையப்பட்ட, கிறிஸ்துவையே நேசிக்கும் அந்த வாழ்வினைப் பெற்றேன். சந்தோஷத்தின் உச்ச கட்டத்தை கற்றுக் கொள்ளுங்கள். "**நான் என் நேசருடையவள் என் நேசர் என்னுடையவர்**". உன். 6:3

கிறிஸ்துவின் அன்பால் கவரப்படாமலும் அவரது அன்பிற்கு முற்றிலும் அடிமைப்படாவிட்டாலும் நாம் நமக்காக வாழ்வதை நிறுத்த முடியாது. எதிராக அவரை நேசித்து நம்மை வெறுத்தால் அவரை எங்கும் பின் செல்லலாம். எது நமக்கில்லாவிட்டாலும் திருப்தியுடன் வாழலாம். ஏனெனில் அவரது புன்சிரிப்பு நமக்கு சூரிய ஒளி, அவரது பிரசன்னம் நமது சந்தோஷம், அவரது அன்பு ஊற்றப்பட்ட இருதயம் பரலோகம், நமது இருதயம் மிகவும் திருப்தியுடனிருப்பதால் தியாகம், பாடு போன்றவற்றைக் குறித்த பேச்சோ, எண்ணமோ ஏற்படுவதில்லை.

நானல்ல, ஆனால் கிறிஸ்துவே

Not I, But Christ

A.B. Simpson (1843-1919)

"கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையப்பட்டேன்". இது பாவம் மரிப்பதைக் காட்டுகிறது. "இனி ஜீவிப்பது நான் அல்ல". இது அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையால் வரும் புதுவாழ்வு. "ஆயினும் நானல்ல கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார்". இது சுயத்திலிருந்து விடுதலையையும் புதிய வாழ்வில் கிறிஸ்துவே பதிலாக வாழ்வதுமாகும்.

"இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்". (கலா.2:20)

நீங்கள் சுயத்துக்குச் சாவீர்களானால் இயேசுவின் மேல் பிரியம் கொண்டு அவரே உங்கள் தனிப்பட்ட வாழ்வில் சாலொமோனின் சந்தோஷப் பாடலாவார். கிறிஸ்துவின் அன்பை மட்டுமல்ல, ஜீவனுள்ள அவரையே விரும்புகிறோம். அனேகருக்கு கிறிஸ்துவின் அன்பின் தொடுதல்கள் இருக்கிறது, ஆனால் அவர்களுக்கு அவர் பரலோகத்தின் தேவனாகதூரமாயிருக்கிறார். இதைவிட பலத்த ஒரு சத்தியத்தை அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். நம்மில் வாழுகிறவரும் பெரியவருமாகிய கிறிஸ்து, சிறிய 'நான்' என்கிற சுயத்தை வெளியே துரத்த போது மானவராயிருக்கிறார். சுயத்தின் மேல் வல்லமையுள்ளவர் இயேசு ஒருவரே.

நாம் சுத்திகரிக்கப்படாவிட்டால் பரிசுத்த வாழ்வுக்குள் பிரவேசிக்க முடியாது. பாடுகள் பரிசுத்தத்துக்கு பயிற்சிக்களமாயிருப்பதால் அவற்றை நாம் வரவேற்க வேண்டும்.

கிறிஸ்து ஆசீர்வதிக்கப்பட்டவர் அவர் பாவம், துக்கம், வியாதி ஆகிய வற்றிற்கு மட்டுமல்ல. உங்களுக்கும் எனக்கும் ஜீவனானவர். ஒவ்வொரு நொடியும் அவர் நம்மை நிரப்பி, நம்மை ஆட்சி செய்யும் சுயத்தை மேற் கொள்ளுகிறார். சுய எண்ணங்கள் முயற்சிக்க முயற்சிக்க ஓட்டி நிற்கின்றன. ஆனால் அதற்கு முதுகு காட்டி, ஆண்டவரை நோக்கிப் பார்த்தால் அவரது பிரசன்னத்தால் அகற்றப்படுகின்றன. அவரில் நிலைத்திருப்பதைத் தவிர வேறு கதியில்லை.

தூய ஆவியானவரின் ஞானஸ்நானமும் ஆவியானவர் நம்மில் வாசம் செய்வதும் சுயத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கும். மகிமையின் மேகம் கூடாரத்தை நிரப்பிய போது மோசேக்கு அங்கு இடமில்லை. ஆவியானவரின் பரம சமுகம் இறங்கி வரும் போது சுயம் மறைந்து, யோபைப் போல "...இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" (யோபு 42:5,6) என்று சொல்லுவோம்.

அவருக்குரிய நமது சரீரமாகிய ஆலயத்தை அவர் முழுவதும் நிரப்பும் போது சுயம் மறைந்து அவருடைய மகிமை சூரிய ஒளி போல பிரகாசிக்கும். அது சரீரத்திற்குள்ளே மட்டுமல்ல, வெளிப்புறமாகவும் பிரகாசிக்கும்.

தேவன் பயன்படுத்தியவை யாவும் முதலில் சுத்திகரிக்கப்பட்டன. அவர் தம்மை வெறுமையாக்கிய இரட்சகர். அவர் தம்மை விளம்பரப் படுத்தவில்லை. தேவன் அவரை உயர்த்தி எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பக்திரிகை வரக் தவறினால் உடனே தகவல் தாருங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

ஆன்ட்ரூ ஸ்டிறெட் – முழுமையான கீழ்படிதலும் மற்றும் முற்றிலும் அர்ப்பணமும்

Andrew Stirrett: Full obedience and entire consecration

Rowland V. Bingham

1902-ம் ஆண்டு ஆன்ட்ரூ ஸ்டிறெட், நோலண்ட் பிங்காம் என்பவரை அழைத்தார். நோலண்ட் பிங்காம் சூடான் இன்டீரியர் மிஷன் ஸ்தாபகர். அவரிடம் தான் அவரால் பிரசுரிக்கப்பட்ட **'மைய சூடானுக்காக ஒரு வேண்டுகோள்'** என்ற துண்டு பிரசுரத்தை வாசித்து அதின் செய்தியால் உந்தப்பட்டு இந்த தொடப்படாத நிலம் எப்படியும் சுவிசேஷத்தை அறிய வேண்டும் என்று கூறினார்.

ஸ்டிறெட் கனடாவில் ஒரு பார்மஸிஸ்டாக இருந்ததால் மருத்துவ படிப்பை முடித்திருந்தும் பட்டம் பெற முடியவில்லை. ஆனால் சூடானின் நிலைமையால் தொடப்பட்டு அங்கு செல்ல விரும்பினார். பிங்ஹாமிடம் "நான் போக வேண்டாமென நீங்கள் எண்ணினால், எனது சொத்து முழுவதையும் விற்று யாரேனும் ஒருவர் போகட்டும்" என்று கூறினார்.

பிங்ஹாம் இவரது உத்தமத்தால் மகிழ்ச்சியடைந்தார். ஸ்டிறெட் ஒரு விசேஷித்த மருத்துவ பயிற்சியை பிரிட்டனில் பெற்றால் சேவைக்கு மிகுந்த நன்மையாயிருக்கும் என எண்ணினார்.

நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை... நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்...

சூடான் உள்நாட்டு மிஷனுடைய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பினார். மிஷனுடைய கவுன்சில் ஆதரவுடனிருந்த போது அவரது வயது 37 என அறிந்தனர். உடனே பிற ஸ்தாபனங்கள் வயதைப் பற்றி என்ன கருத்துடையவர்களாயிருந்தனர் என விசாரித்தனர்.

இதற்கிடையில் பிங்ஹாமுக்கு ஸ்டிறெட்டிடமிருந்து ஒரு குறிப்பு வந்தது. அதில் ஸ்டிறெட் தமது சகலவிதமான சொத்துக்களையும் மிஷனுக்குக் கொடுத்து விட்டு லிவர்ப்பூலுக்கு ஒரு மருத்துவ படிப்புக்காகச் செல்வதாக குறிப்பிட்டிருந்தார். அதோடு கவுன்சிலின் தீர்மானம் அவர் மூன்று மாத படிப்பை முடிக்குமுன் கிடைக்க நம்புவதாகவும் கூறியிருந்தார். அவர் படகுக்காகக் கூட சரியான காசு வைக்கவில்லை. அட்லாண்டிக் கடலை கால்நடைகள் கொண்டு செல்லும் படகில் பிரயாணம் செய்ய ஆயத்தமானார். சொகுசான வாழ்க்கையிலிருந்தவர்களுக்கு இது ஒரு கடின அனுபவம்.

கவுன்சில் இன்னும் சரியான தீர்மானத்துக்கு வரவில்லை. மிஷன் தளத்தில் ஒரு மருத்துவருக்குத் தேவை இருந்த போதும் பிற ஸ்தாபனங்கள் இந்த வயதுடைய ஒருவரை ஏற்க தயங்கியதால் கவுன்சில் இவரை ஏற்க தயங்கியது. லிவர்ப்பூலிலுள்ள ஒரு குழுவிற்கு இந்த விவகாரத்தில் தீர்மானம் எடுக்க பரிந்துரைக்க தீர்மானம் செய்தது.

முற்றிலும் அர்ப்பணம்

லிவர்ப்பூல் குழு விசாரணை தொடங்கியது. அப்போது ஸ்டிறெட் குடிசை வாழ்பகுதியில் தங்கியிருப்பது தெரியவந்தது. அவர்களுக்கு அவர் ஏழைகள் மத்தியில் வாழ்ந்து ஒவ்வொரு நாளும் திறந்த வேதாகமத்தோடு ஜெபித்து தனது எஜமானுக்காக சாட்சியாக வாழ விரும்பினார் என்பது தெரியாது. ஒரு நாள் பின்னிரவில் அவர் திறந்த வேதபுத்தகத்தோடு ரோட்டோர விளக்கினடியிலிருந்து தியானத்தில் இருந்தார். ஏனெனில் தானிருந்த குடிசையையும் அந்த இரவு வீடில்லாத ஒரு மனிதனுக்குத் தங்கியிருக்க கொடுத்து விட்டார்.

மூன்று மாதங்கள் முடிந்ததும் டொறன்டோ மிஷன் கவுன்சிலுக்கு தான் மருத்துவ படிப்பை முடித்து விட்டதாகவும் ஏன் மிஷன் தனக்கு பதில் எதுவும் தரவில்லை எனக் கேட்டதோடு வருகிற வாரம் நான் மேற்கு ஆப்ரிக்கா செல்லும் ஒரு கப்பலில் செல்ல பயணச் சீட்டு பெற்றுள்ளதாகவும் கூறினார். அந்த மிஷன் நிலையத்திற்குச் சென்று மிஷன் தலைவரிடம் அவரது விண்ணப்பம் அங்கிகரிக்கப்பட்டதா இல்லையா என விசாரித்தார்.

கவுன்சில் தலைவரிடம் ஸ்டிறெட்டை பயிற்சியாளராக எடுத்துக் கொள்ள பரிந்துரைத்தது. ஆயிரக்கணக்கான டாலர் மதிப்புள்ள சொத்துக்களை சுவிசேஷ பணிக்காக அர்ப்பணித்து விட்டு ஏற்றுக் கொள்ளப்படாத நிலையிலிருக்கும் அவரை மக்களுக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் அவருடைய நிலங்களை கவனித்து வருமானத்தை அவருக்கு அனுப்பலாமா என கேட்டனர். ஏனெனில் ஒருவேளை அவர் அவைகளை விட்டு விட்டதற்காக மனம் வருந்துவாரோ என அவர்கள் நினைத்தனர்.

அந்த மனிதன் அல்லது தேவ ஆவியானவரின் செயலையும் அவரது அர்ப்பணிப்பையும் யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு பதிலாக ஸ்டிறெட் பர்னபா எப்படி தனது நிலங்களையெல்லாம் விற்று அப்போஸ்தலர் பாதங்களில் வைத்தானோ அப்படியே செய்ய அவன் நடத்தப்பட்டான் என்றும் மிஷனுக்கு எல்லாவற்றையும் கொடுத்து விட்டு மற்ற மிஷனெரிகளைப் போல தாமும் வாழப் போவதாகத் தெரிவித்தார்.

மிஷன் அவருடைய சொத்துக்களைத் விற்காமல் அவர் விடுமுறைக்கு வரும்வரை காத்திருந்தார்கள். எனவே அவர் ஒரு ட்ரஸ்ட் பத்திரம் மூலமாக முழு எஸ்டேட்டையும் மிஷனுக்கு அளித்து விட்டார். பின் வந்த நாட்களில் அவர் தனக்குக் கிடைத்த சொற்ப வருமானத்தில் 100 டாலர்களை புதிய ஊழியர்களுக்காகக் கொடுத்து உதவினார்.

சிறிய உருவம், கடினமான வாழ்வு அதோடு நிறைந்த அர்ப்பணம்

உருவத்தில் ஸ்டிறெட் சிறிய வராகவும் கடினமானவராகவும் தோற்றமளித்தார். ஆவிக்குரியபடி ஆத்தும ஆதாயத்தில் மிகுந்த அர்ப்பணமுடைய வராயிருந்தார். எந்த சூழலிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கியாமலோ ஒரு தனிநபரிடம் சுவிசேஷம் சொல்லாமலோ தூங்கப் போவதில்லை. வியாபாரிகளின் கூட்டங்கள், தனிநபர் சந்திப்புகள் மற்றும் உத்தமமான அவரது தனிப்பட்ட சாட்சி, அவரது அன்பான செயல்கள் எல்லாம் அவரது பயண பாதைகளில் ஊழியத்தின் முதல் பகுதி முடிவதற்குள்ளே எங்கும் பரவி விட்டது.

சொந்த நாட்டுக்குச் சென்ற அவர் தனது மருத்துவ படிப்பை முடித்து விட்டு நைஜீரியாவுக்கு ஒரு மருத்துவராக சேர்ந்தார். இந்த முறை இரு மாதங்கள் அலைந்து சுவிசேஷம் கேட்காத 12 இன மக்களைக் கண்டுபிடித்து, அவர்களில் ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு மிஷன் நிலையங்களை ஏற்படுத்தினார்.

இதுவரை கேள்விப்பட்டிராத மக்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதே அவருடைய வாஞ்சை. வேறு எதைக் குறித்தும் அவர் கவலைப்படவில்லை. "இந்த இன மக்களை வாழுமிடத்தில் கண்டுபிடித்து ஒரு தேசத்துக்கே நித்திய ஜீவனுக்குச் செல்லும் வாசலைத் திறப்பது எத்தனை மகிமையான வாய்ப்பு" என்று அவர் எழுதியிருக்கிறார்.

ஸ்டிறெட் பண்ணிய பிரயாணங்களைக் குறித்து அவரது நண்பர் ஒருவர், "**அவர் ஒரு லிவிங்ஸ்டன் போல் புதிய இடங்களை தேடிச் செல்லும் பிரயாணி அல்ல, ஆனாலும் அவர் ஒரு சாதாரண பிரயாணி அல்ல**".

அவர் ஒரு சராசரி மருத்துவருமல்ல. அவரது மருத்துவ பங்களிப்புக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை கவுரப்படுத்தியுள்ளது. மேற்கு ஆப்ரிக்க நோய்களுக்குரிய சிகிச்சை குறித்து அதிகார பூர்வமான ஒரு கைப்புத்தகம் எழுதியுள்ளார். SIM என்ற மிஷனுடைய வளரும் மருத்துவ பிரிவின் அனேக சிறு ஆஸ்பத்திரிகளை அவர் மேற்பார்வையிட்டார். மிஷனெரிகளுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் குடும்ப மருத்துவராயிருந்தார். அவர் தாமே ஒரு சிறு ஆஸ்பத்திரியை நிறுவி, மருந்தாளராக மருந்துகள் தயாரித்து மிஷன் ஆஸ்பத்திரிகளுக்குக் கொடுத்தார்.

பிரசங்கிக்கும் வாஞ்சை

இவற்றிற்கு மேலாக பிரசங்கம் செய்வதிலும், தனிப்பட்ட சாட்சியிலும் அவர் மேம்பட்டு விளங்கினார். "அவர் ஒரு பெரிய பிரசங்கியல்ல, ஆனால் இடைவிடாமல் பிரசங்கிப்பதில் அவர்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மகான்" என்று SIM தலைவர் கை பிளேஃபயர் கண்டுள்ளார். நமது கணக் கின்படி அவர் 20,000 தடவைகளுக்கு மேல் பிரசங்கித்துள்ளார். ஒன்றரை மில்லியன் மக்களுக்கு மேல் அவர் பிரசங்கிப்பதைக் கேட்டுள்ளார்கள்.

அவரது சேவைக்கு தூண்டுதலா யிருந்தது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. '**வா என்று அழைக்கும் ஒரு குரலை நான் கேட்டதில்லை**' என்று அவர் அடிக்கடி கூறுவ துண்டு. ஆனால் வேத வாக்கியங்களின் கட்டளைப்படி, சுவிசேஷம் கிடைக்கப் பெறாத மக்கள் மேலுள்ள கரிசனை, அவரை ஊழியம் செய்யத் தூண்டியது. கர்த்தர் சீக்கிரமாக வரவிருக்கிறார்; நீங்கள் நிச்சயமாக அவரை சந்திக்க வேண்டி யிருக்கும், அப்போது நீங்கள் சொகுசாய் உட்கார்ந்து கொண்டிருப்பீர்களா?

ஹவுஸா இன மக்கள் அவருக்கு அதிகப் பிரியமானவர்கள். அவர்களது மொழியில் வேதாகமம் அவர்கள் கரத்தில் இருப்பது அவரது சொப்பனம். மொழி பெயர்க்கும் குழுவில் ஒரு முக்கிய நபராக சேர்ந்து கொண்டார். 1932-ல் பிரிட்டிஷ் மற்றும் அயல்நாட்டு வேதாகம சங்கம் அவரது கரத்தில் முழு ஹவுஸா வேதாகமம் கொடுத்த போது அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே யில்லை.

அனுதின வாழ்வில் தனிப்பட்ட ஒழுங்கான கால அட்டவணை வைத் திருந்தார். காலை 3.45 மணிக்கெல்லாம் அவர் முழங்காலில் நிற்பார். உபவாசிப் பதற்கும் ஜெபிப்பதற்கும் சில நேரங் களை அவரது ஆப்ரிக்க மக்களுக்காக ஒதுக்கி வைத்திருந்தார்.

நைஜீரியாவில் ஒரு பெட்டி மற்றும் சூட்கேசுடன் சென்றார். மிகவும் சிக்கனமாக வாழ்ந்தார். கூழ், கனிகள் போன்றவற்றை அதிகமாக உண்டார். அதிகாலையில் நடைப் பயிற்சிக்குச் செல்வார்.

தனியாக வாழ்ந்த அவர் விடு முறையை விரும்பியதில்லை. அவரது 46 வருட ஊழியத்தில் 41 வருடங்கள் ஆப்ரிக்க ஊழியத்தில் SIM உடன் செய்தார்.

பின் நாட்களிலும் ஹவுசா மொழி பெயர்ப்பிலும் பிழை திருத்து வதிலும், சந்தை வெளிகளில் பிரசங்கிப் பதிலும் செலவிட்டார். நடக்க முடியாத நிலையில் கார் சவாரி மூலம் இரு மைல்கள் செல்வது அவரது பழக்கம். இந்தப் பழக்கத்தை 83 வயதில் மரிப்பதற்கு முந்தின நாள் வரையிலும் கடைபிடித்தார்.

1948 ஜூலை 9ம் நாள் காலை ஜெப நேரத்தில் இயேசுவுக்குள் நித்திரை யடைந்தார். நாற்பத்தாறு ஆண்டுகள் முழு அர்ப்பணிப்புடனும் தாழ்மை யுடனும் ஆப்ரிக்காவில் கிறிஸ்துவுக்காக பணியாற்றினார்.

தகுதியுள்ளவர்களென்று சந்தோஷப் பட்டார்கள். திரள் கூட்டமான அன்பான விசுவாசிகள் துன்பங்களிலும் ஆண்டவரை மகிமைப்படுத்தி சத்தி யத்தை தங்கள் குருதியினால் முத்திரை யிட்டார்கள்.

ஒவ்வொரு விசுவாசியிலும் காணப்பட வேண்டிய இரத்த சாட் சியின் அனுபவம் சொகுசான வாழ்வி னாலும், உலக நேசத்தாலும், அதிகமாக அழிந்து போய் விட்டது.

ஆவியில் ஒவ்வொரு கிறிஸ்த வனும் ஒரு இரத்த சாட்சியாக வாழ வேண்டும். எல்லாவற்றையும் கிறிஸ்து வுக்காக விட்டு விட ஆயத்தமாயிருக்க வேண்டும். "கிறிஸ்துவுக்காக வாழ்வை துணிவுடன் அர்ப்பணிப்பதே மிகப் பெரிய ஆனந்தம்" என்று தனது நண்பருக்கு எக்கோலம் பாடியஸ் என்ற பக்தன் எழுதுகிறார். உலக சொத்து சுகங்களுக்காக தங்களுக்கு லாபமென்று கருதி அர்ப்பணிப்பவர்களுண்டு, ஆனால் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம், அன்பு இவற்றிற்காக இழந்து போக முன் வருபவர்கள், சந்தோஷமடைவார்கள். ஏனெனில் எல்லாவற்றையும் இவ்வுலகில் இழந்துவிட்டாலும் இரட்சகர் மூலம் வாடாத மகிமையின் கிரீடத்தைப் பெற முடியும்.

ஆவிக்குரிய இரக்கங்களையும், மனித உதவிகளையும் பெறும் போது மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் வேதனைகளுக்காகவும், சோதனைகளுக் காகவும், இழப்புகளுக்காகவும், சிலுவை களுக்காகவும் நன்றி சொல்லுகிறோமா?

எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செலுத்த 1 தெச.5:18 அப்போஸ்தலன் அழைக்கிறாரே. இந்த ஆவி அவர்களில் காணப்பட்டது போல நம்மில் இல்லையே. கிறிஸ்துவுக்காக நஷ்டங் களை சந்தோஷத்துடன் சகிப்பவர்கள் யார்? யார் துன்பங்களிலும் கர்த்தரை மகிமைப்படுத்துவார்?

ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்ட வரே உமது சபையின் மேல் தூய ஆவியை ஊற்றுவீராக. உலகின் கடந்து போகும் இன்பங்களுக்கு நான் விலகட்டும். உழைக்கவோ, சகிக்கவோ எந்த இடத்திற்கு அழைக்கிறீரோ எழுந்து உம்மைப் பின் செல்ல நான் தயாரா கட்டும். நிமிடந்தோறும் பெறுகின்ற இரக்கங்களுக்காக நான் நன்றியுடனிருக் கட்டும். இந்த இரக்கங்களால் சந்தோஷப் பட்டு, சொகுசுகளை தவிர்க்கவும், உமக்காகவே வாழவும் உதவி செய்யும். என்னில் உண்மையான மார்க்கம் பெருகட்டும். இவ்வுலகில் ஏற்படும் மாற்றங்கள் உமது பேரிலுள்ள உறுதியை மாற்றக் கூடாது. உம்மிலேதான் உண்மையான மகிழ்ச்சி உண்டு. இந்த ஆவிக்குரிய உணர்வைத் தாரும். உமது பிள்ளைகளின் அனுபவமும் பங்கு மாகிய ஆவிக்குரிய சத்தியங்களை தெளிவுபடுத்தும். அவை தான் வரப் போகும் நித்திய ராஜ்யத்தின் ஆசீர்வாதத் தை எங்களில் உண்டாக்கும்.

கிறிஸ்துவுக்காக துணிந்து நிற்போம்

Venture all for Christ

Thomas Reade (1776 - 1841)

பொதுவாக கெட்டுப் போன நிலையிலுள்ள கிறிஸ்தவனிடத்தில் நான்கு தீமைகளைக் காணலாம். அவை உலக சினேகம், சொகுசான வாழ்வின் ஆசை, மனிதர் மேலுள்ள பயம், தேவன் மேலுள்ள அவநம்பிக்கை என்பவை யாகும். ஆரம்ப கால விசுவாசிகள் இதற்கு எதிரானவர்கள். அவர்கள் உலகத்தை வெறுத்து, அதன் கவர்ச்சி களை விட்டு விலகி, சிலுவையை எடுத்துக் கொண்டு, தங்களை வெறுத்து, தைரியமாக கிறிஸ்துவை அறிக்கை யிட்டு, அவருக்காகப் பாடுகளை ஏற்றுக் கொண்டு, எல்லாவற்றிற்கும் அவரையே நம்பி, வாழ்ந்தார்கள். அதன் ஆசீர்வாத மான கனி எது? ஆறுதலில் பெருகி னார்கள், கிருபையில் வளர்ந்தார்கள். உலகத்தில் சுடர்களைப் போல பிரகாசித் தார்கள். விசுவாசிப்பதில் மகிழ்ச்சியும் சமாதானமும் பெற்றார்கள்.

இன்று நம் அதிகமாகப் பேர்க் கிறிஸ்தவர்களைத் தான் பார்க்கிறோம். அவர்கள் கிருபையில் ஆர்வமற்றவர்கள், அறிக்கையிடுவதில் மென்மையானவர் கள், விளைவுகளைப் பற்றிய பயம் நிறைந்தவர்கள், யாரும் துன்பப்படுத்தி விடுவார்களோ என்று பயப்படுகிறவர் கள். ஆவிக்குரிய வீழ்ச்சியின் துக்கமான அடையாளங்கள் இவை. எனவே சுவிசேஷத்தின் ஆவி வெளிப்படுத்தப் படவில்லை. கிறிஸ்து மகிமைப்படுத்தப் படவில்லை.

உலகில் சுவிசேஷப் பணி மிகவும் மெதுவாகச் செல்லுகிறது. உத்தம மார்க் கத்தின் வலிமை பெரும்பாலானவர்வர்க ளால் உணரப்படவில்லை. ஆண்டவர் தாமே தமது ஜனங்களை உயிர்ப்பிப் பாராக. அவர் தமது பணியை இந்த நாட்களில் எழுப்புதலடையச் செய் வாராக.

லூக்.9:23-ல் இயேசு: "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு அனுதினமும் என்னைப் பின்பற்றக் கடவன்" என்றார். இருதயத்தில் உலக சினேகம், பெருமை, அவிசுவாசம், போன்றவைகள் கிரியை செய்தால் சிலுவை சுமக்க முடியாத பாரமாகி விடுகிறது. ஆனால் இருதயம் இரட்சகர் மீதுள்ள அன்பால் நிறைந்திருக்கும் போது சிலுவை பாரமானதாயிருந் தாலும் எளிதாகவும் இன்பமாகவும் கூட மாறிவிடும். யாக்.1:2-ல் "பல விதமான சோதனைகளில் அகப்படும் போது அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். இயேசுவின் நாமத்திற்காக பாடு களையும், வெட்கத்தையும் அனுபவிக்க

பாதுகாவலரான இயேசு

Jesus the Keeper

Andrew Murray (1822-1917)

"கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார், அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்" *சங்.121:5,7*

" "...நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்து மிருக்கிறேன்" *2 தீமோ.1:12.*

கர்த்தர் நம்மை ஏற்றுக் கொண்ட தோடு நம்மைப் பாதுகாக்கிறவருமா யிருக்கிறார். இளம் சீஷர்களுக்கு பெலவீனமாயிருப்பதால் இதை விட அவசியமான பாடம் இல்லை. அவருடைய அழகிய பெயர் கர்த்தர் உன்னைக் காக்கிறவர். இந்தப் பெயர் நமது இருதயங்களில் சர்வ வல்லவரின் பலத்த காவல் நம்மில் பவுல் *2 தீமோ.1:12*-ல் கூறியது போன்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பவுலிடமிருந்து கற்றுக் கொள்ள முயற்சி செய்வோம்.

பவுல் தன் சரீரத்தையும் ஆத்துமாவையும் முற்றிலும் அர்ப்பணித் தார். அது அவர் கர்த்தருக்கு படைத்த பணயம். நீங்களும் உங்களைக் கர்த்தருக்கு அர்ப்பணித்திருக்கலாம், ஆனால் அதனை ஒவ்வொரு நாளும் அதைக் கைக்கொள்ள வேண்டும் என்ற தெளிவான புரிந்து கொள்ளுதல் இல்லாம லிருக்கலாம். இப்போது தினமும் அப்படிச் செய்யுங்கள். உங்கள் ஆத்து மாவினை ஒரு அருமையான பணயப் பொருளாக அர்ப்பணிப்போம். அவர் அதைப் பத்திரமாகக் காத்துக் கொள்ளு வார். உங்கள் வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் இவ்வாறு ஒப்படை யுங்கள். ஏதேனும் ஒரு பகுதியை நீங்கள் கட்டுப்படுத்த முடியவில்லையா? உங்கள் இருதயம் லௌகீக சிந்தையு டையதாயிருக்கிறதா? உங்கள் நாவு அதிக சோம்பலாயிருக்கிறதா? எந்த பெலவீன மாயினும் அதனை கர்த்தரிடம் ஒப்படை யுங்கள். நீங்கள் அடிக்கடி ஒரு பாவத்தை விட்டுவிட மிகவும் கஷ்டப்படுகிறீர்கள். அதை தேவனால் செய்யப்பட விட்டு விடாமல் அதை நீங்கள் மேற்கொள்ள பிரயாசப்படுகிறீர்கள், கூடாது. சங்கதியை முழுவதும் இயேசுவிடம் ஒப்புவியுங்கள். யுத்தம் தேவனுடையது, உங்களுடையதல்ல. அவர் உங்களுக்காக செய்யும்படி அவர் கரத்தில் ஒப்புவி யுங்கள். உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும். முதலாவது உங்கள் கரத்தி லுள்ளதை முழுவதும் அவர் கரத்துக்கு ஒப்புவித்து விடுங்கள்.

பவுல் அப்போஸ்தலனிட மிருந்து உங்கள் நம்பிக்கையை இயேசுவின் வல்லமையின் மேல் வைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு சர்வ வல்லவரான இயேசு ஒருவர் பாதுகாவல ராக இருக்கிறார். விசுவாசம் உங்களை அவரது சர்வ வல்லமையை அணைத்துக் கொள்ளச் செய்கிறது. உங்கள் விசுவாசம் தேவன் செய்யக் கூடியவற்றால் உறுதிப் படட்டும். உங்கள் பெலனுக்கு மேலான மகத்துவமான பெரிய காரியங்களை உங்களுக்கு நிச்சயமாகச் செய்வாரென நம்புங்கள். தேவனுடைய வல்லமை அவரது ஜனங்களின் நம்பிக்கைக்கு ஆதாரமாயிருந்ததென்று பரிசுத்த வேதாகமம் உறுதியாகச் சொல்ல வில்லையா! இந்த வசனங்களை உங்கள் இருதயத்தில் மறைத்து வையுங்கள். இயேசுவின் வல்லமை உங்கள் ஆத்து மாவை நிரப்பட்டும்.

இந்த வல்லமையின் நம்பிக்கை யை பவுல் எங்கிருந்து பெற்றார்? இயேசுவைப் பற்றிய அறிவிலிருந்து பெற்றார். "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்", இதுவே அவரின் நம்பிக்கை அவர் உங்களுடை யவர் என்றும் அவருடைய வல்லமையை நம்பலாமென்றும் உணர்ந்து, அவரோடு ஒரு நண்பனைப் போல பேசுங்கள். அப்படியானால் "நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன். அவர் என்னை அன்புடன் பிடித்துக் கொள்வார். அவர் என் பணயப் பொருளை பாதுகாப் பார்" என்று சொல்லலாம். இதுவே முழுமையான விசுவாசத்திற்கே வழி. அவருடைய சத்துவத்தைச் சார்ந்து நம்பிக்கையோடிருங்கள். நீங்கள் விசுவாசிக்கிறவரோடு வாழ்ந்து அவரை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

இளம் விசுவாசியே, கர்த்தர் உன்னைக் காக்கிறவர் என்பதை ஏற்றுக் கொள். எந்த பலவீனத்திலும், சோதனை யிலும் ஆத்துமாவை அவரிடம் ஒப்புவி. அதன் மூலம் சத்தமிட்டு கெம்பீரிக்க முடியும். அவர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்.

பரிசுத்தரான இயேசுவே, நான் உம்மை என் பாதுகாவலராக ஏற்றுக் கொள்ளுகிறேன். இந்த உமது பெயர் ஒரு பாடலாக நாள் முழுவதும் என் இருதயத்தில் ஒலிக்கட்டும். எல்லாத் தேவையிலும் உன்னை அவருக்கு ஒப்புவித்து அவர் பாதுகாப்பார் என்ற உறுதியுடனிரு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும் தரித்திரர் ஆனதில்லை. **"அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."** (2 கொரி.9:7)

5. தாழ்மையுள்ள சவுல்: (1 சாமு. 9:20,21)

சவுல் தாழ்மையுள்ளவனாய்க் காணப்பட்டான். தாழ்மையுள்ளவர் களுக்கு தேவன் கிருபையளிக்கிறார். சாமுவேல் தீர்க்கதரிசி சவுலைப் பார்த்து சகல இஸ்ரவேலின் அபேட்சையும் யாரை நாடுகிறது? உன்னையும் உன் வீட்டாரையும் அல்லவா? என்றான். அப்பொழுது சவுல் பிரதியுத்தரமாக நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்து குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா? நீர் இப்படிப் பட்ட வார்த்தையை என்னிடத்தில் சொல்வானேன் என்றான். **கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.** (யாக்.4:10)

தாழ்மையுள்ள சவுலை கர்த்தர் இஸ்ரவேலின் முதல் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார்.

சவுலிடம் காணப்படும் இந்த நல்ல குணங்களை அப்பியாசப்படுத்து வோம். தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கும் தேவன் நம்மை ஆசீர்வதித்து ராஜாக்களும் ஆசாரியர் களுமாய் மாற்றுவார். தேவன் நமக்கு உதவி செய்வாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : 95432 21008 கிறிஸ்துவுக்குள்,
உதவி : 94897 40295 **W. சாமுவேல் பின்னி**

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

சபைகளோ தங்கள் எண்ணிக்கையில் பெருமை பாராட்டிக் கொண்டு தங்கள் வல்லமையில் தாழ்ந்து காணப்படுகிறார்கள்.

பரிசுத்தவான்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குப் பதிலாக சபைகளின் எண்ணிக்கையை பெருக்கி விட்டோம்.

எவ்வளவு அதிகமாக அவரோடு சமயம் செலவு பண்ணுகிறோமோ அவர் நம்மைப் புதுப்பித்து நமது வாழ்வு நம்மை சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு இயேசுவைப் பிரதிபலிக்கச் செய்கிறது.

பரிசுத்தம் என்பது வேத வாக்கியங்களின்படி ஒரு கட்டளை. இதற்கு கீழ்ப்படிய ஜெபம் என்பது கடமையாக அல்ல வாஞ்சையாயிருக்க வேண்டும்.

நாம் சமயமெடுத்து தேவனது பரிசுத்தம் நம்மேல் பிரகாசிக்க அனுமதிக்காவிட்டால் பரிசுத்தத்தைப் பெறுவது கூடாத காரியம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason